# 12th Standard Economics Answerkey

## PART - A

| Q.N | ANSWER | Q.NO | ANSWER |
|---|---|---|---|
| 1 | ஆ. இலயனல் ராபின்ஸ். | 11 | ஈ. TFC/Q |
| 2 | இ). தன்னிறைவுப் பொருளாதாரம் | 12 | அ. நீண்டகாலச் செலவுக்கோடு. |
| 3 | ஈ.. விருப்பங்களை வகைப்படுத்துவது | 13 | இ).. MC = MR |
| 4 | இ). தகு விலை- உண்மைவிலை | 14 | ஈ. கிடைமட்டமாக இருக்கும் |
| 5 | ஈ. மொத்த பயன்பாடு உச்ச அளவை எட்டுகிறது. | 15 | அ.. முற்றுரிமைப்போட்டி |
| 6 | இ.தேவை வளைகோடு இடம் பெயர்தல் | 16 | இ. வருமானமும் வேலைவாய்ப்பும் |
| 7 | ஆ. xபண்டமும் y பண்டமும் உடனுறுப் பண்டங்கள் | 17 | ஈ ஒட்டு மொத்த தேவையையும் ஒட்டுமொத்த அளிப்பையும் |
| 8 | ஈ) மேற்கூறிய அனைத்தும் | 18 | அ. நுகர்வு மற்றும் வருமானம |
| 9 | ஈ). பயன்பாட்டை உருவாக்குதல் | 19 | அ. மைய வங்கி |
| 10 | அ. பல்வேறு உற்பத்திக் கலவைகளை தீர்மானிப்பவர் | 20 | அ. புதிய ஆண்டு |

## PART-B

21. பொருளாதாரம் பற்றி ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணம் யாது?
"மனித வாழ்கையின் அன்றாட நடவடிக்கை களைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது. பொருளியல் ஒரு பக்கம் செல்வத்தைப் பற்றியும் அதைவிட முக்கியமான மற்றொரு பக்கம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது." எனக்குறிப்பிடுகிறார்.

22. விருப்பங்களுக்கான காரணங்கள் யாவை?
1. உளவியல் காரணங்கள் 2.சமூக காரணங்கள் 3. பழக்கவழக்கங்கள் 4. விளம்பரங்கள்

23. .தேவை நெகிழ்ச்சியின் வகைகள் யாவை?
1..விலைதேவை நெகிழ்ச்சி 2.வருமானத் தேவை நெகிழ்ச்சி 3..குறுக்குத் தேவை நெகிழ்ச்சி அல்லது பின்னியத் தேவை நெகிழ்ச்சி

**24. சமமுறிவுப் புள்ளி என்றால் என்ன?**
இலாபமும், நஷ்டமும் இல்லாப் புள்ளி சமமுறிவுப் புள்ளி எனப்படும்

25. **விலை பேதத்தின் இரண்டு நிபந்தனைகள் யாவை ?**
1. தேவையை விலை அதிகமான அங்காடியிலிருந்து குறைவான அங்காடிக்கு மாற்ற இயலாது.
2. முற்றுரிமையாளர்கள் இரண்டு அங்காடிகளை தனித்தனியாக வைத்திருப்பார்கள்.

26. **மாற்று ஊதியம் என்பது யாது?**
மாற்று ஊதியம் என்பது ஒரு உற்பத்திக் காரணியை அடுத்த சிறந்த உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது கிடைக்கும் ஊதியம் ஆகும்.

27. போலி வாரம் **என்றால் என்ன?**
இயந்திரங்களிலிருந்தும் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளி லிருந்தும் பெறப்படும் வருமானமே போலி வாரம் எனப்படும் .

**28. இறுதி நிலை நுகர்வு நாட்டத்திற்கு சூத்திரம் தருக.**
$MPC = \Delta C / \Delta Y$

**29.** கடன் அளவுக் கட்டுப்பாட்டின் கருவிகள் யாவை?
a) வங்கி வட்டி வீதம் b)ரொக்க இருப்பு வீதத்தை மாற்றுதல் c) வெளிச்சந்தை நடவடிக்கை

**30. பேராசிரியர் செலிக்மேனின் வரி இலக்கணம் யாது.?**
வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகை. அரசிடம் இருந்து எந்தவிதமான நேரடி நன்மையும் எதிர்பார்காமல் கட்டாயமாக செலுத்த வேண்டியதே வரி எனப்படும்.

# PART-C

**31.** ஆடம்சுமித்தின் செல்வ இலக்கணத்தின் குறைபாடுகள் யாவை?
குறைபாடுகள்
1. மகிழ்வற்ற அறிவியல்
2. இருண்ட அறிவியல்
ஆடம்சுமித்தின் இலக்கணம் செல்வத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. மேலும் ஆடம்சுமித்தின் இலக்கணம் மனித நடவடிக்கைகளைப் பற்றிகுறிப்பிடவில்லை.

**32.** கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகளை விவரி?
நன்மைகள்.
**1. திறமையான வளப்பயன்பாடு.** :- வளங்கள் முழுவதும் திறமையான வகையில் பயன்படுத்தப்படுகிறது.
**2.நிர்வகிக்கப்பட்ட விலை.** :-பற்றாக்குறையான பண்டங்களுக்கு அரசே விலையை நிர்ணயம் செய்கிறது..
**3. சமுகநலன்.** :- கலப்புப்பொருளாதாரத்தில் திட்டமிடுதல் மையப்படுத்தப்படுவதால் ஒட்டுமொத்த சமுகநலன் நிலவுகிறது

**33.** உற்பத்தி வாய்பு வளைகோட்டை விளக்குக..
ஒரு சமுதாயம் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டிருப்பதால் அதன் அனைத்து தெரிவுகளையும் உற்பத்தி வாய்பு வளைகோட்டின் வாயிலாக மேற்கொள்ள இயலும்.
உற்பத்தி வாய்பு வளைகோடு என்பது பல இணைகளில் இரு பண்டங்களின் உற்பத்தியை மேற்கொள்வதாகும்.

**34. கிஃபன் புதிரைப் பற்றி-சிறு குறிப்பு வரைக.**

ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ் நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும் விலை குறைந்தால் தேவை அளவும் குறையும்.

**35. அங்காடி காலத்தில் சமநிலை விலை தீர்மானிப்பதை விளக்குக.**

**அங்காடி காலம்**

1.தேவையில் அதிகமாற்றம் இருக்கும். 2. அளிப்பில் மாற்றம் இருக்காது.

3.அளிப்புக்கோடு செங்குத்தாக Y அச்சுக்கு இணையாக இருக்கும்

**அங்காடி கால சமநிலை**

அங்காடி காலம் அல்லது மிகக் குறுகிய காலத்தில் சமநிலை விலை யானது தேவை மாற்றத்தினாலும், நிலையான அல்லது மாறாத அளிப்பினாலும் தீர்மானிக்கப்படுகிறது.

**36. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?**

1.இலாபகரமான முதலீட்டு வாய்புகளை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்தல்.
2. உற்பத்தி அலகின் அளவைத் தீர்மானித்தல்
3. உற்பத்தி அலகின் இடத்தை தேர்ந்தெடுத்தல்.
4. உற்பத்திக் காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பைக் கண்டறிதல்.
5. புத்தாக்கப்பணி.
6. இடர்பாடுகளை ஏற்றல், நிச்சயமின்மையை எதிர்கொள்ளல்.

**37. முற்றுரிமையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் யாவை?**

**1.சட்டம் இயற்றுதல்.**--1969 இல் இயற்றப்பட்ட MRTP சட்டத்தின் மூலம் முற்றுரிமை சக்தியை கட்டுப்படுத்தலாம்.

**2.விலை உற்பத்தி அளவு கட்டுப்படுத்துதல்**--அரசே விலை மற்றும் உற்பத்தி அளவை கட்டுப்படுத்தலாம்.

**3.வரி விதித்தல்.**--முற்றுரிமையாளர் மீது அரசு வரி விதிப்பதால் முற்றுரிமையாளரின் இலாபம் குறைந்து முற்றுரிமை சக்தி தடுக்கப்படுகிறது.

**4.நாட்டுடமையாக்குதல்.**--நுகர்வோரை சுரண்டி வாழும் பெரிய முற்றுரிமை நிறுவனங்களை அரசே ஏற்று நடத்தலாம்.

**5.நுகர்வோர் சங்கங்கள்.**--இதன் மூலமாக நுகர்வோரின் பேரம் பேசும் ஆற்றலை அதிகப்படுத்தி முற்றுரிமையைக் கட்டுப்படுத்தலாம்

**38. இறுதிநிலை உற்பத்தித் திறன் பகிர்வுக் கோட்பாட்டின் குறைபாடுகள் யாவை?**

1. சில வகையான பணிகளின் உற்பத்தி மதிப்பை அளவிடுவது கடினம்.
2. இக் கோட்பாடு அளிப்புப் பகுதியை புறக்கணித்துவிட்டது.
3. நிறைவுப்போட்டி நடைமுறையில் இல்லை
4. நடைமுறையில் உற்பத்தி காரணிகளை மாறுபட்ட வழிகளில் பயன்படுத்துவது கடினம்.

**39. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுகோள்களை விளக்குக?**

1.இருபிரிவினர் உள்ளார்கள் -
நுகர்வோர் (c),நிறுவனங்கள் (I)
2.அரசின் தூண்டுதல் இல்லை (G=0)
3.மூடப்பட்ட பொருளாதாரம் (X-M=0)
4.கூலி விலையில் மாற்றம் இல்லை
5.முழு வேலைவாய்ப்பைவிட குறைவான நிலை
6.வட்டி விகிதத்தில் மாற்றம் இல்லை
7.முதலீடு தன்னிச்சையானது
8.நுகர்வுச்செலவு நிலையானது
9.மூன்று எடுகோள்களின் காரணமாக
$Y=C+I+G+(X-M)$ சுருக்கப்பட்டு $Y= C+I$ என்றாகிறது

**40. பண்டமாற்று முறையில் உள்ள பிரச்சனை களை விளக்குக.**

**பண்டமாற்று முறை.**

பண்டமாற்று முறை என்பது பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குதல் ஆகும்.

**பண்டமாற்று முறையில் உள்ள பிரச்சனைகள்.**

**1. இரட்டைத்தேவைப் பொருத்தம்.**

ஒரு நபர் மற்றொரு நபர் விரும்புவதை பெற்றிருக்க வேண்டும்.

**2. பண்டங்களை இருப்பு வைத்திருப்பது கடினம்.**

சில பண்டங்கள் அழுகக் கூடியவை சில பண்டங்கள் அதன் மதிப்பை இழந்து விடும்.

# PART-D

**41. a ) சமதர்மப் பொருளாதாரத்தின் பண்புகள் ,நன்மைகள் அல்லது சிறப்புகள் யாவை?**

பண்புகள்

1.சமூகநலன். 2.தனியார்சொத்துரிமைஇன்மை 3.மையத்திட்டம் 4.அங்காடிசக்திகளில்லை

**சிறப்புகள்**

**1.வளங்கள் திறமையாக பயன்படுத்துதல்.** சமுதாய நலன் பயக்கும் பண்டங்கள் உற்பத்தி செய்வதால் வளங்கள் வீணாகாமல் பாதுகாக்கப்படுகிறது.

**2. பொருளாதார நிலைத்தன்மை:-** இங்கு அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிட்டு, செயல்படுத்தப்படுவதால் பொருளாதார நிலைத்தன்மை ஏற்படுகிறது.

**3.சமுதாய நலன்.** சமுதாய நலன் பயக்கும் பணிகளை அரசுமேற்கொள்கிறது.

**4. முற்றுரிமை இன்மை.** :-சமதர்மப் பொருளாதாரத்தில் தனியார்சொத்துரிமை மறுக்கப்படுவதால் முற்றுரிமையின் கூறுகள் அகற்றப்படுகின்றன.

**41. b. ) குறைந் து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக?**

**குறைந்து செல்இறுதிநிலைபயன்பாட்டு விதி.** ஒருபண்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் அதன் பயன்பாடு குறையும்.

**இலக்கணம்** :-"ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது "என்று மார்ஷல் குறிப்பிடுகிறார்

எடுகோள்கள் :-


1.பண்டத்தின் சரியான அளவை குறிப்பிடவேண்டும் 2.பண்டங்கள் ஒரே தரமானவை

3.கால இடை வெளியின்றி தொடர்ந்து நுகரவேண்டும்

4.பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றம் இல்லை. 5.பயன்பாட்டை அளவிடமுடியும்.

**விதியின் விளக்கம்** :-பசியோடு இருக்கும் ஒரு நுகர்வோர் முதல் ஆப்பிள் சாப்பிடும்போது அவருக்கு அதிக பயன்பாட்டைக் கொடுக்கும் ,2,3,4,5,என பழங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.போது அவருக்கு கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து கொண்டே செல்லும்

இதை வரைபடம் விளக்குகிறது.




வரைபடவிளக்கம்

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடு பூஜியத்தில் இருக்கும்.

3.மொத்த பயன்பாடு குறையும் போது இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**42. a.) சமநோக்கு வளைகோட்டின் எடுகோள்கள் யாவை? சமநோக்கு வளைகோட்டின் வழியாக நுகர்வோர் சமநிலையை விளக்குக.**

எடுகோள்கள்

1.நுகர்வோர் பகுத்தறிவு உள்ளவர். 2. X,Y,என்ற இரு பண்டங்களை மட்டும் வாங்குகிறார்.
3.விலை பயன்பாட்டைக் குறிக்கும் 4.வருமானத்தில் மாற்றமில்லை 5.சுவைகளில் மாற்றமில்லை

**நுகர்வோர் சமநிலை**

ஒரு நுகர்வோர், தனது வரையறுக்கப்பட்ட வருமானத்தில் அதிக மனநிறைவை பெறக்கூடிய இரு பண்டங்களின் சிறந்த இணைத் தெரிவை **நுகர்வோர் சமநிலை** என்கிறோம்.


சமநிலைக்கான நியதிகள் $\mathbf{MRS_{XY} = P_X / P_Y}$

**42. b.) . விலைத் தேவை நெகிழ்ச்சியினை புள்ளி முறை யில் அளவிடுக.**

புள்ளிமுறை:-

தேவைக்கோட்டின்மீது ஒரு குறிப்பிட்ட புள்ளியில் விலைத்தேவை நெகிழ்ச்சியை அளவிடலாம்.

விலைத்தேவை நெகிழ்ச்சி = $\dfrac{\text{தேவைக்கோட்டின் கீழ் பகுதி}}{\text{தேவைக்கோட்டின் மேல்பகுதி}}$




AB=4cm என்க.

1.A புள்ளியில் முற்றிலும் நெகிழ்ச்சி உள்ள தேவை
2.C புள்ளியில் மிகைத்தேவை நெகிழ்ச்சி.
3.E புள்ளியில் அலகுத்தேவை நெகிழ்ச்சி
4.Dபுள்ளியில் குறைந்த தேவை நெகிழ்ச்சி.
5.B புள்ளியில் முற்றிலும் நெகிழ்ச்சி அற்ற தேவை

**43. a.)** 1.தேவை விதியினை விவரமாக எழுதுக? **தேவைவிதியின் விதிவிலக்குகள் யாவை?**

**தேவைவிதி**:-விலைக்கும் தேவைக்கும் உள்ள எதிர்கணிய தொடர்பை தேவைவிதி விளக்குகிறது.

**இலக்கணம்:-**

"பெர்கூசன்"என்பவரின் கூற்றுப்படி "விலையும் தேவையும் எதிர்கணிய தொடர்பு கொண்டுள்ளன." விலை கூடினால் தேவை குறையும். விலை குறைந்தால் தேவை கூடும்.

**விதிவிலக்குகள்**

**1. .கிஃபன் புதிர்**

ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ் நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும் விலை குறைந்தால் தேவை அளவும் குறையும்.

**2. வெப்ளன்விளைவு**


வெப்ளன் விளைவு விதிவிலக்குத் தேவையை குறிக்கும்.

பணக்காரர்கள் தங்களின் அந்தஸ்துக்காக சில பொருட்களை விலை உயர்ந்தால் அதிகமாக வாங்குவர்,மாறாக விலை குறைந்தால் அப் பொருட்களை வாங்கமாட்டார்கள்.

**43. b. ) சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப் படுகிறது என்பதை விளக்குக.**

சமநிலை விலை

தேவைக்கோடும் அளிப்புக்கோடும் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியில் சமநிலை விலை தீர்மானிக்கப்படும். இது விற்றுத் தீர்க்கும் விலை என்றும் அழைக்கப்படும்.




சமநிலை விலை தீர்மானித்தல்

சமநிலை விலை தீர்மானிப்பதை வரைபடம் விளக்குகிறது

வரைபட விளக்கம்

1. E என்ற புள்ளியில் S = D அப்பொழுது சமநிலை OP ஆக உள்ளது.

2. $OP_2$ என்பது சமநிலை விலைக்கு மேல் உள்ளது. இங்கு S > D.
3. $OP_1$ என்பது சமநிலை விலைக்கு கீழ் உள்ளது. இங்கு S < D.

**44. a. ) சம அளவு உற்பத்திக்கோடுகள் என்றால் என்ன? அதன் இயல்புகளை விளக்குக.**

**சம அளவு உற்பத்திக்கோடு**

சம அளவு உற்பத்திக்கோடு என்பது இரு உற்பத்திக் காரணிகளை பல்வேறு கலவைகளில் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தி செய்வதைக் குறிக்கும்

**சம அளவு உற்பத்திக்கோட்டின் இயல்புகள்**

**1. இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும்.**

சம அளவு உற்பத்திக்கோடு இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும். அதாவது எதிர்மறையாக சரிந்துள்ளது.

**2. தோற்றுவியை நோக்கி குவிந்து காணப்படும். .**

இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு விகிதத்தால் சம அளவு உற்பத்திக்கோடு தோற்றுவியை நோக்கி குவிந்து காணப்படும்.

**3. ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.**

சம அளவு உற்பத்திக்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.

**44. b. ) ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் பல்வேறு செலவுகளை விளக்குக.**

**உற்பத்திச் செலவு**

ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது ஏற்படுகின்ற பல வகையான செலவினங்கள் உற்பத்திச் செலவு என்று அழைக்கப்படும்.

**பல்வேறு செலவுகள்.**

**1. பணச்செலவு**

ஒரு பொருளைஉற்பத்தி செய்ய பணமாக செலவிடுகின்ற அனைத்து தொகையையுமே பணச்செலவு ஆகும் எ.கா. மூலப்பொருள் செலவு, கூலி மற்றும் சம்பளம்.

**2. உண்மைச் செலவு**

இது உள்ளுணர்வு சார்ந்த கருத்தாகும்.உற்பத்தி செய்வதில் ஏற்படும் துன்பம் மற்றும் தியாகத்தை இது குறிக்கும்.

**3. பிறவாய்ப்புச் செலவு**

ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கப்படுவதால் அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது.

**4. பேரேட்டுச் செலவு //வெளியுறுச் செலவு.**

உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள் வெளியுறுச் செலவு.என அழைக்கப்படும்.எ.கா.மூலப்பொருள் செலவு, கூலி மற்றும் சம்பளம்.

**5. உள்ளார்ந்த செலவுகள்**

ஒரு தொழில் முனைவோர் தன்னுடைய சுய உழைப்பு, முயற்சி,சிந்தனை மற்றும் தனக்கு சொந்தமான காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் அதற்கான வெகுமதியே உள்ளார்ந்த செலவுகள் ஆகும்

**6. பொருளாதாரச் செலவு .=** வெளியுறுச் செலவு + உள்ளார்ந்த செலவுகள்

**45. a. )** குறுகிய காலத்தில் நிறைவுப்போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன?

நிறைவுப்போட்டி:-


1.எண்ணற்ற விற்பனையாளர்கள் இருப்பர். 2.விலையில் மாற்றம் இருக்காது.
3.பதிலிப்பண்டங்கள் இருக்கும். .

வருவாய் கோடுகளும், செலவுக்கோடுகளும்:-

AR மற்றும் MR கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும். இது Xஅச்சுக்கு இணையாக இருக்கும். P=AR=MR. செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும்.AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.

நிறுவனச்சமநிலை :-

நிறைவுப்போட்டியில் சமநிலையானது SMC=SMR என்ற நிலையில் இருக்கும். அப்பொழுது சமநிலைவிலை தீர்மானிக்கப்படும். இதை கீழ்க்காணும் வரைபடம் விளக்குகிறது.




வரைபட விளக்கம்:-

1. Q என்றபுள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.
2. OP என்பது சமநிலை விலை OM என்பது சமநிலை உற்பத்தி.
3. PQRS என்ற கோடிட்ட பகுதி அந்நிறுவனம் ஈட்டும் அதிகப்படியான லாபம் ஆகும்.
4. குறுகியகாலத்தில் நஷ்டம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

45. b. ) முற்றுரிமை போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன?

முற்றுரிமைப் போட்டி

பேராசிரியர் E.H.சேம்பர்லின் என்பவர் முற்றுரிமைப் போட்டியினை அறிமுகப் படுத்தினார் இப் போட்டியில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் உற்பத்தியாளர்கள் இருப்பர் . உற்பத்திப் பண்டங்கள் ஒன்றுக்கு ஒன்று பதிலீட்டு பண்டமாக இருக்கும். எ.கா.பற்பசைகள்--க்ளோசப் பெப்சோடண்ட், கோல்கேட் ஆகும்.


**விலை உற்பத்தி தீர்மானம்**

**வருவாய் கோடுகளும், செலவுக்கோடுகளும்:-**

1. முற்றுரிமை போட்டியில் வருவாய் கோடுகள் மேல் இருந்து கீழ்நோக்கி சரிந்து செல்லும்.AR கோட்டிற்கு கீழ் MR கோடு அமைந்திருக்கும். வருவாய் வளைகோட்டின் சரிவானது நிறுவனங்களின் எண்ணிக்கையைப் பொருத்து அமைந்திருக்கும்.

2.செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.

**நிறுவனச்சமநிலை** முற்றுரிமைப் போட்டியில் நிறுவனச்சமநிலையானது MC=MR என்ற நிலையில் இருக்கும்.




வரைபட விளக்கம்

1..E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.

2.OP என்பது சமநிலை விலை ON என்பது சமநிலை உற்பத்தி.

3 .PQRS என்பது நிறுவனம் ஈட்டும் அதிகப்படியான லாபம்.

4. முற்றுரிமைப் போட்டியில் அதிகப்படியான லாபம் அல்லது நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

**46. a. ) . ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.**


இக்கோட்பாடு பழமையான கோட்பாடுகளில் ஒன்றாகும்.

**இலக்கணம்**

வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்.

**விளக்கம்**

ரிக்கார்டோ வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர் அதிக மக்கள் குடியேறும் போது நிலத்தின் தேவை அதிகரிக்கும் அதனால் இரண்டாம் தர நிலத்தை அவர்கள் பயிர் செய்வர். இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும். மக்கள்தொகை அதிகரிப்பதால், மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். அப்பொழுது இரண்டாம் தர நிலம் வாரத்தைப் பெறும்.மேலும் முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும். மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத் தையும் பெறாது. இது வாரமில்லா நிலம் இதை வரைபடம் மூலம் விளக்கலாம்.




**வரைபடவிளக்கம்**

கோடிட்ட பகுதி வாரத்தை குறிக்கும்

I. முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும்.

II. இரண்டாம் தர நிலம் குறைந்த வாரத்தைப் பெறும்.

III. மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம்

**திறனாய்வு.**

1. தொடர்ந்து பயிர் செய்யப்பட்டால் நிலத்தின் செழுமை குறையும்.
2. உழைப்பு,முதல் ஆகியவற்றிக்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.
3. ஒரு நிறுவனத்தைப் பொருத்தவரை வாரம் விலையோடு அடங்கும்.
4. நிறைவுப்போட்டி என்பது நடைமுறையில் இல்லை.

**46.b. )சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளை ஆராய்க.**

**அங்காடி விதி**

ஜே.பி.சே யின் அங்காடி விதி என்பது "அளிப்பு அதற்கான தேவையை தானே ஏற்படுத்திக் கொள்கிறது."சே விதியின் குறைபாடுகளை ஜே.எம்.கீன்ஸ் வெளிகொணர்ந்தார்.

**குறைபாடுகள்**

1.மந்தம் காரணமாக சே விதியின் புகழ் மங்கியது
2.வருமானம் அனைத்தும் நுகர்விக்காக அல்ல.
3.சேமிப்பு அனைத்தும் முதலீடு ஆகாது.
4.அங்காடிபற்றிய தவறான ஆய்வு.
5.ஒட்டுமொத்தம் என்ற கருத்தால் பாதிப்பு.
6.ஒட்டு மொத்தஅளிப்பும் ஒட்டுமொத்த தேவையும் சமமல்ல.
7.முதலாளித்துவம் தன்னைத்தானே சரிசெய்துகொள்ளாது.
8.நிறைவுப்போட்டி உண்மையற்ற எடுகோள்.
9.பணம் முக்கியசக்தி.
10.நீண்டகாலத்திற்கு மட்டும் பொருந்தும்.
11.பண்டமாற்றுபொருளாதாரத்திற்கு மட்டும் பொருந்தும்.

**47. a. ) பணஅளவின் கோட்பாடு என்பதை விவரி?**

**பணஅளவுக் கோட்பாடு**

பணஅளவின் கோட்பாட்டை உருவாக்கியவர் இர்விங்பிஷர் ஆவார். பணஅளவுக் கோட்பாட்டின் மையக்கருத்து பணஅளிப்பின் அளவு மாற்றம் அடையும்போது விலையும் மாற்றம் அடையும் .

**பணப்பரிமாற்றத்தின் சமன்பாடு**

**PT=MV** என்பது பணப் பரிமாற்றத்தின் சமன்பாடு என்று அழைக்கப்படுகிறது.

P=விலை மட்டத்தை குறிக்கும். T= மொத்த உற்பத்தி

M= பண அளிப்பு V= பணப்புழக்க வேகம்

தற்காலத்தில் பண அளிப்பின் பெரும்பகுதி காசோலைகள், மாற்றுச் சீட்டுக்கள், மற்றும் ஏனைய கடன் கருவிகள் உள்ளடங்கி இருக்கிறது. எனவே இச்சமன்பாட்டை கீழ்கண்ட வாறு மாற்றி அமைக்கலாம்.

[redacted]

M1=மொத்த கடன் கருவிகள் V1=கடன் கருவிகளின் புழக்க வேகத்தைக் குறிக்கும்.

**திறனாய்வு**

1. இக்கோட்பாட்டின் முக்கிய குறைபாடு முழுவேலைவாய்ப்பை எடுகோளாக கொண்டுள்ளதே ஆகும்.
2. பண அளவைத் தவிர மற்ற காரணங்களாலும் விலை பாதிக்கப்படும் அவை அரசின்பணக்கொள்கை மற்றும் நிதிக் கொள்கை ஆகும்.

**47.b. ) நிதுக்கொள்கையின் நோக்கங்கள் என்னென்ன?**

**நிதிக்கொள்கை**

நிதிக்கொள்கை என்பது அரசு மேற்கொள்கின்ற அரசின் செலவு மற்றும் வருவாய் பற்றிய காரியத்திட்டம் ஆகும்.

**நோக்கங்கள்.**

1. அரசின் நிதி ஆதாரங்களை பெருகச் செய்தல்.
2. தனியார் துறையை வளர்ச்சியடையச் செய்தல்.
3. பணவீக்கத்தை கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல்.
4. வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.
5. முழு வேலைவாய்ப்பை அடைதல்.